தெஹியத்தகண்டி பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹியத்தகண்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உபபிரவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தெஹியத்தகண்டி பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, கட்டுப்படுத்தும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 417,726 மற்றும் மீளாய்வாண்டில் வட்டி வருமானம் ரூபா 137,969 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	வட்டி வருமானம் கணக்கிடும் போது நிலையான வைப்பு கால எல்லைகளை சரியாக கணக்கிடாத தவறின் மீது எற்பட்டதாக இனங்கண்டதுடன் அந்த தவறு 2025 நிதிக்கூற்றுக்கள் மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	LDSP, PSDG நிகழ்சித் திட்டம் மற்றும் விசேட செயற்திட்டத்தின் கீழ் மேற்கொண்ட 14 செயற்திட்டங்களிற்குரியதாக மேற்கொண்ட ரூபா 11,772,443 தொகை மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை.	2025 நிதிக்கூற்றுக்கள் மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	மூலதன செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்..

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பதிவேட்டின் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுகள் பிரகாரம் 04 மீதிகளிற்கிடையே ரூபா 350,487 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள மீதிகள் சரியாவதுடன் பதிவேட்டில் ஏற்பட்டிருந்த தவறை இனங்கண்டு சரிசெய்வதென.	இணங்காமைக்கான காரணத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்த கூட்டுத் தொகை ரூபா 428,100,397 ஆன 06 கணக்கு விடயங்களில் காணி உறுதி, கணிப்பீட்டு சபை அறிக்கை, நிலையான சொத்து பதிவேடு, கலப்பு வைப்பு பதிவேடு மற்றும் அட்டவணை போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கும் மீதிகளை உறுதி செய்யும சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன..

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	**இணக்கமின்மை**	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம்			
	1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டம்	சபை அதிகார பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதப்பத்திரம் வழங்க வேண்டிய அனைத்து நிறுவனங்களையும் இனங்கண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அத்கார பிரதேசத்தில் கணிப்பீட்டை மேற்கொண்டு இனங்காணாத சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விழங்க வேண்டிய நிறுவனங்களிற்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுப்பதென.	சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக விதி)			
	(i) 33 விதி	வீதவரித் தொகையை புறக்கனிப்பவர் பற்றிய பட்டியலொன்றை தயாரித்து ஆதனத்தடை செய்வதற்காக தேவைான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தேவையான சட்ட நடவடிக்கையை ஆரம்பித்து நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென.	நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
	(ii) 59 விதி	ஒவ்வொறு ஆண்டும் வருமான பரிசோதகரினால் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்	சபையில் தற்போது வருமான பரிசோதகர் பதவி வெற்றிடமாக காணப்படுவதுடன் அப் பதவியில் பதிற்கடமை	நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		ஒருவரினால் சபை அதிகார பிரதேசத்தினுள் கணிப்பீடொன்றை செய்து வர்த்தக வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பான பட்டியல் ஒன்றை தயாரித்து ஒவ்வொறு ஆண்டின் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளரிற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் அவ்வாற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	புரியும் உத்தியோகத்தர் அலுவலக பணி உதிவயாளராவார். வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பான பதிவேட்டை நாளாதுவரையாக்க அறிவுரை வழங்கி விரைவில் சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுப்பதென.	
	(iii)218 விதி	சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொறு ஆண்டிற்கு ஒரு முறையேனும் பரீட்சிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பரீட்சிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென.	நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3 பந்தி	வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதனையை மேற்கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சில வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது டன் காணப்படும் தவறுகளை திருத்தம் செய்து எரிபொருள் பாவனை பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,682,803 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,707,370 ஆனது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

தலைவரின் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

	வருமான மூலங்கள்	2024				2023			
		மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	சேகரித்த வருமானம்	திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை	மதிப்பிடப் பட்ட வருமானம	பில்லிட்ட வருமானம	சேகரித்த வருமானம்	திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	வீதவரி மற்றும் வர	1,739,311	1,850,471	1,766,020	2,403,893	1,639,312	1,833,172	1,664,976	2,319,442
ii.	வாடகை	18,312,761	19,558,127	19,090,659	3,236,543	17,544,027	15,726,511	14,850,934	2,769,076
iii.	அனுமதிப்பத் திர கட்டணம	1,800,000	2,244,400	2,325,500	427,700	2,125,500	2,503,210	2,520,710	508,800
iv.	ஏனைய வருமானம	7,084,075	10,084,281	11,357,721	691,025	7,908,310	10,233,586	8,538,811	1,964,465
	கூட்டுத் தொகை	**28,936,147**	**33,737,279**	**34,539,900**	**6,759,161**	**29,217,149**	**30,296,479**	**27,575,431**	**7,561,783**

2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வீதவரி மீத ரூபா 2,403,863 ஆனதுடன் 2024 சனவரி 01 திகதி வரை அறவிட வேண்டிய நிலுவை வீதவரி ரூபா 2,319,442 பெறுமதியிலிருந்து 2024 ஆண்டில் ரூபா 382,220 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை அறவிடும் முன்னேற்றம் 16 சதவீதமளவு மிகக் குறைந்த பெறுமானத்தில் காணப்பட்டது.	நிரந்தர வருமான பரிசோதகர் ஒருவர் சபைக்கு இல்லாததால் நிலுவை வருமானம் சேகரிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதனை முடியுமானவரை முகாமை செய்து கொண்டு நிலுவை வருமானத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதெனை.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 2,402,372 ஆனதுடன் நிலுவைத் தொகையை அறவிட சபையினால் சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவை கடை வாடகை வருமானத்தை சேகரிக்க குறித்த நிலுவை கடை உரிமையாளர்களிற்கு தேவையான அறிவித்தலை அனுப்பி சட்ட செயற்பாடுகளை எடுக்க நடவடிக்கை எடுப்பதெனை.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,

பொது மக்களின் நல்வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணைச் சட்டம் விதிக்க வேண்டிய விடயங்களை இனங்கண்டு துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2024 திசெம்பர் 31 திகதி வரை 05 துணைச் சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன.	கணக்காய்வினால் தொடர்ந்தும் சுட்டிக் காட்டுகின்ற பிரதேச சபை சட்டத்தின் 126 கீழ் துணை சட்டம் இல்லாதது தொடர்பாக கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதுடன் தற்போது 05 துணைச் சட்டங்களை விதித்து செயற்படுவதெனை.	துணைச் சட்டம் விதித்து சபையிலுள்ள நடவடிக்கைகளை சட்டரீதியாக்கிக் கொள்ள வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தின் மேலதிக விதிமுறை மற்றும் நிபந்தனை இலக்கம் 2.2 மற்றும் 2.3 இற்கு முரணாக மாதாந்தம் உருவாகும் 16 டொன் அளவான உக்கலடையாத கழிவுகளை திறந்த வெளியில் அகற்றுவதனூடாக அதிக சுற்றாடல் மாசு இடம்பெறுவதால் உக்கலடையாத கழிவுகளை மீள்சுழற்ச்சிப்டுத்தும் வேலைத் திட்டம் தொடர்பில் சபையின் மிக்க கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.	இயந்திர உபகரணங்கள் இல்லாததால் இந்த செயற்பாட்டை நாளாந்தம் மேற்கொள்ள முடியாதுள்ளது. ஓரளவு கழிவுகள் திரண்ட பின்னர் அக்கழிவுகளை மண்இட்டு மூடிவிடுவதெனை.	சுற்றாடல் நேயத்துடன் செயற்பட வேண்டும்.
(ஆ)	பிரதேச சபையினால் மாதாந்தம் உக்கலடையும் மற்றும் உக்காத 240 டொன்கள் அளவு மற்றும் உக்கலடையாத கழிவுகள் 16 டொன்களாக 2024 ஆண்டில் ரூபா 3,767,211 செலவில் சேகரிக்கப்பட்டு இருந்ததுடன் உக்கலடையும் கழிவுகளால் சேதனப்பசளை 3500 கிலோ கிராம் அளவு உற்பத்தி செய்து அந்த இருப்பில் 2350 கிலோ கிராம் அளவு விற்பனை செய்து ரூபா 46,000 வருமானம் மாத்திரம் திரட்டப்பட்டிருந்தது.	இரசாயன பசளை பாவனைக்கு மீண்டும் இடமளிக்கப்பட்டதன் மீது சேதனபசளைக்கான கேள்வி குறைந்த காரணத்தால் விற்பனை குறைவடைந்தது. சேதனப் பசளை பாவனை தொடர்பாக. பொது மக்களை அறிவுருத்தும் நிகழ்சித் திட்டம் நடாத்தி கேள்வியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதெனை.	வருமான ஈட்டுதலை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2022 பண்டக கணிப்பீட்டின் மூலம் பற்றாக்குறையென இனங்கண்டு 62 பண்டக உருப்படிகள் தொடர்பாக பொறுப்பிற்குரிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு குறித்த பண்டங்களை	சரியான களஞ்சிய ஒழுங்கு முறையை பின்பற்றி நடவடிக்கை எடுப்பதெனை.	களஞ்சிய கட்டுப்பாட் முறையை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் சபையின்

	சபைக்கு அழைப்பித்துக் கொள்ள அல்லது தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		கவனம் செலுத்தப்பட வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குரிய ஆதனங்களிற்காக 2011 ஆண்டு மதிப்பீட்டின் அடிப்படையின் மீது வீதவரி அறவிடப்படுவதுடன் காலரீதியாக அந்த ஆதனங்களை மதிப்பீடு செய்து அதன் மீது வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2011 ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடொன்றை மேற்கொள்ள மதிப்பீட்டு திணைக்களத்திடம் அவ்வப் போது கோரியுள்ள போதும் இதுவரை அதற்காக பதில் கிடைக்கவில்லை. மீண்டும் கோரிக்கைவிட நடவடிக்கை எடுப்பதென.	ஆதனங்களை காலரீதியாக மதிப்பீடு செய்து அதன் மீது வருமானம் சேகரிக்க வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைக்குரிய 44 மயானங்களின் மற்றும் 38 மைதானங்களின் மற்றும் ஏனைய கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	ஆதனங்களின் பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பிரதேச சபைக்குரிய 03 வாகன உருப்படிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	வாகனங்களின் பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	சபையின் பொறுப்பிலுள்ள 06 வாகனங்களின் உரிமையை சபையின் பெரில் சுவீகரிக்க சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	UNEP மற்றும் ஏனைய நிறுவனங்களினால் அன்பளிப்பு செய்துள்ள வாகனங்களின் முறையான ஒப்படைப்பு எமது நிறுவனத்திடம் இல்லாததால் சுவீகரிக்க முயாதுள்ளதென.	மோடார் போக்குவரத்து ஆணையாளரை வினவி வாகனங்களின் உரிமையை சபையின் பெரில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 மனித வளங்கள் முகாமைத்துவம

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

(அ)	மீளாய்வாண்டு இறுதியில் 09 பதவிகளில் 12 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் கள தொழிலாளர் பதவி ஒன்று மிகையாக்க காணப்பட்டது.	கணக்காகய்வினால் குறிப்பிட்டுள்ளவாறு ஊழியர் வெற்றிடம் காணப்படுவதும் அதன் பிரகாரம் எமது நிறுவனத்தில் பணிகளை மேற்கொள்ளும் போர்து பிரச்சினை ஏற்பட்டுள்ள போதும், கிழக்கு மாகாண சபையினால் இந்த ஆட்சேர்பு தாமதமாவதன் மீது இந்த பிரச்சினையை தீர்க்க முடியாதுள்ளது.	வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 254,155 பெறுமதியான 03 கடன் மீதிகள் 02 ஆண்டு காலமாக கடன்தாரர்களிடம் அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காகய்வினால் குறிப்பிட்டுள்ளவாறு ரூபா 123,060 பெறுமதியான ஊழியர் முற்பணம் திரு பீ.ஜீ. சமரதுங்க அவரின் ஓய்வூதியம் செலுத்தும் போது கழிப்பதற்காக அறிவித்துள்ளதுட்ன சேவையை விட்டுச் சென்ற திரு ஆர்.பியதிஸ்ஸ என்பவரிற்கு தற்போது மீண்டும் இது தொடர்பாக அறிவித்து அனுப்பியுள்ளதால் எதிர்காலத்தில் அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென.	நிலுவை கடன் மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) பிரகாரம் உள்ளக கணக்காய்வின் மூலம் நிறுவன இயக்க செயற்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் வினைத்திறனை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்து செயற்படுத்த ஆரம்பித்து அனைத்து பிரிவினதும் நடவடிக்கைகள் மேவுகை செய்யப்படும் வகையில் முறையாக செய்ய வேண்டிய போதும் பிரதேச சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2024 ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டு ஒவ்வொறு காலாண்டிற்காகவும் குழு அறிக்கையை தயாரித்து தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதென.	சட்டம் பிரகாரம் நிறுவன இயக்க செயற்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் வினைத்திறனை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

4.2 கணக்காய்வுக் குழு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

முகாமைத்தவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 ஜுன் 09 திகதிய இலக்கம் DMA/2009(1) கொண்ட உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை அமைத்து குழுக் கூட்டம் நடாத்தியிருக்கவில்லை.	கணக்காகய்வினால் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளக கணக்காய்வு குழுவொன்று இவ்வாண்டிற்காக தொடர்சியாக செயற்பட்டு வருவதென.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஆரம்பிக்க மற்றும் கூட்டங்களை நடாத்த நடவடிககை எடுக்க வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
2017 இன் 19 இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டம் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்ள தேவையான தரவுகளை சேகரித்து அதனூடாக தேவையான நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்ள சபையினால் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சுற்றறிக்கை பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	சுற்றறிக்கை பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்ள தேவையான தரவுகளை சேகரித்து அதனூடாக தேவையான நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்ள சபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.